கழகத் தலைவரும் தமிழ்நாடு முதலமைச்சருமான மு.க. ஸ்டாலின் அவர்களை நேற்று (4.3.2026) அண்ணா அறிவாலயத்தில், மாநிலங்களவை உறுப்பினர் தேர்தலில் திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் வேட்பாளராக அறிவிக்கப்பட்டுள்ள நாடாளுமன்ற உறுப்பினர் திருச்சி சிவா சந்தித்து வாழ்த்து பெற்றார். உடன் கழக பொருளாளரும். நாடாளுமன்ற உறுப்பினருமான டி.ஆர். பாலு, வேளாண்மை உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம், நாடாளுமன்ற உறுப்பினர் ஆ.ராசா, கழக செய்தி தொடர்பு தலைவர் டி.கே.எஸ். இளங்கோவன் ஆகியோர் உள்ளனர்.

துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று (4.3.2026) சென்னை நுங்கம்பாக்கத்தில் நடைபெற்ற தி.மு.கழகத்தின் சென்னை மேற்கு மாவட்ட இலக்கிய அணி அமைப்பாளர் மு.சீனிவாசன் அவர்களின் மகனும் விமான ஒட்டிகளான திலீபன் கிலேர் மேகன் வுட் இணையரின் வரவேற்பு விழா நிகழ்ச்சியில் கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்தினார். உடன் நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதி மாறன், சென்னை மேற்கு மாவட்ட செயலாளர் நே.சிற்றரசு, பொதுக்குழு உறுப்பினர் எம்.டி.ஆர்.நாதன், பகுதிக் கழக செயலாளர் வினோத் வேலாயுதம், வட்ட கழக செயலாளர் த.குணசேகர் உள்பட கழக நிர்வாகிகள் மற்றும் மணமக்கள் வீட்டார்கள் உடனிருந்தனர்.

சி.எம்.டி.ஏ. சார்பில் பல்வேறு இறுதிக்கட்டப் பணிகள்!

700 அடுக்குமாடி “முதல்வர் நகர்ப்புற குடியிருப்புகள்”!

முதல்வர் மு.க.ஸ்டாலின் திறந்து வைக்கிறார்! அமைச்சர் பி.கே.சேகர்பாபு நேரில் ஆய்வு!

சென்னை, மார்ச் 5-

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களால் விரைவில் திறக்கப்படவுள்ள துறைமுகம் சட்டமன்ற தொகுதி, வால்டாக்ஸ் சாலை, தண்ணீர் தொட்டி தெரு மற்றும் அண்ணா பிள்ளை தெருவில் சிஎம்டிஏ சார்பில் கட்டப்பட்டு வரும் இரத்த சுத்திகரிப்பு நிலையம் மற்றும் மறுவாழ்வு மையம், 700 அடுக்குமாடி “முதல்வர் நகர்ப்புற குடியிருப்புகள்”, முதல்வர் விளையாட்டுத் திடல், மாநகராட்சி அச்சகம் மற்றும் முதல்வர் திருமண மாளிகை என “ஒருங்கிணைந்த வளாகம்” இறுதிக் கட்டப் பணிகளை நேற்று (04.03.2026) இந்து சமய அறநிலையத்துறை அமைச்சரும் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத் தலைவருமான பி.கே.சேகர்பாபு அவர்கள் நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு செய்து, அலுவலர்களுக்கு அறிவுரைகள் மற்றும் ஆலோசனைகள் வழங்கினார்.

இதற்கு முன்னர், அமைச்சர் அவர்கள் கொளத்தூர் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட வார்டு-69, சோமயா தெருவில் பெருநகர சென்னை மாநகராட்சி சார்பில் கட்டப்பட்டு வரும் நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையம், வார்டு-67, பெரம்பூர் வீனஸ் தியேட்டர் அருகில் கட்டப்பட்டு வரும் மாநகராட்சி அலுவலகக் கட்டடம் கட்டுமானப் பணிகள் மற்றும் வி.க. நகர் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட புளியந்தோப்பு, டாக்டர் அம்பேத்கர் சாலையில் பெருநகர சென்னை மாநகராட்சி சார்பில் கட்டப்பட்டு வரும் ஆடுதொட்டி புச்சர் கிரவுண்ட் கட்டுமானப் பணிகளை நேரில் ஆய்வு செய்து, பணிகளை விரைந்து முடித்து, மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வர ஒப்பந்ததாரர்கள் மற்றும் பொறியாளர்களை அறிவுறுத்தி, அறிவுரைகள் மற்றும் ஆலோசனைகள் வழங்கினார்.

இந்த ஆய்வுகளின்போது, மேயர் திருமதி.ஆர்.பிரியா, வி.க. நகர் சட்டமன்ற உறுப்பினர் தாயகம் கவி, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் திருமதி.காகர்லா உஷா, சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழும உறுப்பினர் செயலர்/முதன்மைச் செயலாளர் கோ.பிரகாஷ், மாநகராட்சி ஆணையர் ஜெ.குமரகுருபரன், தமிழ்நாடு நகர்புற வாழ்விட மேம்பாட்டு வாரிய மேலாண்மை இயக்குநர் திருமதி.ஸ்ரேயா பி.சிங், சிஎம்டிஏ முதன்மை செயல் அலுவலர் சந்திர சேகர் சாகமூரி, மாநகராட்சி வடக்கு வட்டார துணை ஆணையாளர் கட்டா ரவி தேஜா, மாநகராட்சி மத்திய வட்டார துணை ஆணையர் எச்.ஆர்.கௌஷிக், மாநகராட்சி நகர் நல அலுவலர் டாக்டர் ஜெகதீசன், மண்டலக் குழுத் தலைவர்கள் பி.ஸ்ரீராமுலு, திருமதி.சரிதா மகேஷ்குமார், சிஎம்டிஏ மாவட்ட வருவாய் அலுவலர் டாக்டர் பால் பிரின்ஸ்லி ராஜ்குமார், சிஎம்டிஏ கண்காணிப்புப் பொறியாளர் ராஜன்பாபு மற்றும் துறைச் சார்ந்த அலுவலர்கள் உடனிருந்தனர்.

திருச்சியில் நடைபெறும் மண்டல தி.மு.கழக மாநாட்டிற்கு

சென்னை தெற்கிலிருந்து 25 ஆயிரம் பேர் திரள்கின்றனர்!

மாவட்ட கழகக் ஆலோசனைக் கூட்டத்தில் அமைச்சர் மா.சுப்பிரமணியன் தகவல்!

சென்னை, மார்ச் 5-

சென்னை தெற்கு மாவட்ட கழக ஆலோசனைக் கூட்டம் நேற்று 4-3-2026 மாலை 6 மணியளவில் வேளச்சேரி விஜய நகரில் உள்ள ஃபோர் பாயிண்ட்ஸ் ஹோட்டலில் மாவட்ட அவைத் தலைவர் எஸ்.குணசேகரன் தலைமையில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் சென்னை தெற்கு மாவட்ட கழக செயலாளரும், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சருமான மா.சுப்பிரமணியன் கலந்துகொண்டு ஆலோசனை வழங்கி, கீழ்க் கண்ட தீர்மானத்தை முன்மொழிந்து உரையாற்றினார்.

தீர்மானம் - 1

வரும் மார்ச்-9 அன்று திருச்சி மாநகரில் நடைபெறும் தி.மு.கழக மண்டல மாநாட்டிற்கு சென்னைத் தெற்கு மாவட்டத்திலிருந்து 25 ஆயிரம் பேர் பங்கேற்பது என்று முடிவெடுக்கப்பட்டது.

தீர்மானம் - 2

வெல்லும் தமிழ்ப்பெண்கள் பிரச்சாரம் குறித்து தொகுதி வாரியாக மகளிர் பொறுப்பாளர்களிடம் ஆய்வு மேற்கொண்டு பிரச்சாரத்தை வரும் மார்ச்-8க்குள் சென்னை தெற்கு மாவட்டத் திற்குட்பட்ட அனைத்து பாகங்களிலும் பிரச்சாரத்தை முடிப்பதென தீர்மானிக்கப்பட்டது.

இக்கூட்டத்தில் நாடாளுமன்ற உறுப்பினர் என்.வி.என்.கனிமொழிசோமு, சட்டமன்ற உறுப்பினர்கள் எஸ்.அரவிந்த்ரமேஷ், காரம்பாக்கம் கணபதி, ஏ.எம்.வி.பிரபாகர்ராஜா, தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் க.தனசேகரன், மு. மகேஷ்குமார், பா.அருணாச்சலம், சமூக வலைதள துணைச் செயலாளர் யாழினி, விளையாட்டு மேம்பாட்டு துணைச் செயலாளர் ஜெர்சிகா, மாநில கலை இலக்கிய பகுத்தறிவுப் பேரவை துணைச் செயலாளர் எம்.எஸ்.ஹரிபாபு, தொகுதி பொறுப்பாளர்கள் எஸ்.ரவிச்சந்திரன், சந்திரபாபு, சாய்காந்த், உமாகாந்த், மாவட்ட கழக நிர்வாகிகள் பாலவாக்கம்த.விஸ்வநாதன், பாலவாக்கம் மனோகரன், வாசுகிபாண்டியன், பொருளாளர் எஸ்.பாஸ்கரன், பகுதி கழக செயலாளர்கள் எம்.கிருஷ்ணமூர்த்தி, இரா.துரைராஜ், கே.கண்ணன், மு.ராஜா, எம்.விநாயகமூர்த்தி, வே.ஆனந்தம், நொளம்பூர் வே.ராஜன், எஸ்.வி.ரவிச்சந்திரன், வி.இ.மதியழகன், ஒன்றிய கழக செயலாளர்கள் கோவிலம்பாக்கம் வெங்கடேசன், துரை.வீரமணி, தலைமைப் பொதுக்குழு உறுப்பினர்கள் சைதை மா.அன்பரசன், களக்காடி எல்லப்பன், உ.துரைராஜ், எஸ்.ஏ. அரிகிருஷ்ணன் உள்ளிட்ட மாமன்ற உறுப்பினர்கள், அணிகளின் மாவட்ட அமைப்பாளர்கள், மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள், வட்ட கழக செயலாளர்கள் முதலானோர் கலந்து கொண்டனர்.

அமைச்சர் பி.கே.சேகர்பாபு முன்னிலை! பரிதி இளம்சுருதி தலைமை!

சென்னை கிழக்கு மாவட்ட திமுக அயலக அணி சார்பில், மாபெரும் புகழரங்கம்!

இந்து என்.ராம், நக்கீரன் கோபால், அருணன், அய்யநான், பிரியன், திருமதி.லட்சுமி சுப்பிரமணியன் சிறப்புரை!

சென்னை, மார்ச்.5-

சென்னை கிழக்கு மாவட்ட திமுக சார்பில், எழும்பூர் வடக்குப் பகுதியில், மக்கள் முதல்வரின் மனிதநேய விழாவை முன்னிட்டு “மனிதநேய விழா33”, நேர்மையின் தூண்கள் ஊடகம்! நீதியை வளர்ப்பது திராவிடம்!! எனும் தலைப்பில், மாபெரும் புகழரங்கம் 05.03.2026, வியாழக்கிழமை அன்று மாலை 6.00 மணியளவில், சென்னை, சேத்துப்பட்டு, மலையாளி கிளப்பில் நடைபெறுகிறது.

இப்புகழரங்கத்தில் கழக அயலக அணி துணைச்செயலாளர் பரிதிஇளம்சுருதி எம்.சி, தலைமை வகிக்கிறார். சென்னை கிழக்கு மாவட்டக் கழக செயலாளரும், இந்து சமய அறநிலையத்துறை (ம) சென்னை பெருநகர வளர்ச்சிக்குழும அமைச்சர் பி.கே.சேகர்பாபு, டாக்டர்.கலாநிதி வீராசாமி எம்.சி, எம்.எம்.அப்துல்லா, சொ.வேலு எம்.சி, வி.சுதாகர், டாக்டர்.பி.எம்.யாழினி, ஆர்.எஸ்.சித்திக், கோ.ஏகப்பன், கே.எஸ்.எம்.நாதன், புனிதவதிஎத்திராசன் எம்.சி, கோ.மணி, க.நந்தீஸ்வரன், அ.நிர்மலாதேவி, ராஜேஸ்வரிஸ்ரீதர் எம்.சி, புரசை ஜி.தாமோதரன், எல்.சுந்தர்ராஜன் எம்.சி, க.வினோத், ஆர்.டி.சங்கர் நானா, த.ஜெயக்குமார், சே.பாலாஜி, எம்.சங்கர், எச்.முகமது இப்ராஹிம் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

முத்து இப்ராஹிம்ணா, சி.அஜித், க.பிரகதீஸ்வர், பா.பிரகாஷ், சையத்நியமத்துல்லா, எம்.வீரேந்தர் நந்தா, யாசர்சர்தார்மீரான், பா.அஜய், சு.சுகுமாரன், எஸ்.எல்.நாராயணன், சுந்தர்ராஜன், விஜய்அமர்நாத், ஆ.பிரகாஷ், வி.மகேஷ்பாபு ஆகியோர் வரவேற்கின்றனர்.

இம்மாபெரும் புகழரங்கத்தில் இந்து என்.ராம், நக்கீரன் கோபால், அருணன், அய்யநான், பிரியன், திருமதி.லட்சுமி சுப்பிரமணியன் ஆகியோர் வாழ்த்துரைக்கின்றனர்.

மேலும் இப்பொதுக்கூட்டத்தில் பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் ஆர்.பிரியாராஜன், தயாநிதிமாறன் எம்.பி, இ.பரந்தாமன் எம்.எல்.ஏ, ப.தாயகம்வி எம்.எல்.ஏ, ஜோசப்சாமுவேல் எம்.எல்.ஏ, அ.வெற்றிஅழகன் எம்.எல்.ஏ, ப.ரங்கநாதன் Ex.MLA, எஸ்.மணிமுடி Ex.MLA, சங்கரிநாராயணன் Ex.MLA, கே.எஸ்.இரவிச்சந்திரன் Ex.MLA, தமிழன்பிரசன்னா வே.உமாகாந்த் பி.கே.மூர்த்தி. எம்.விஜயகுமார் கே.சந்துரு, சி.மகேஷ்குமார் என்.பி.எம்.ஷேக்அப்துல்லா கவிஞர் நன்மாறன் எல்பிஎப். வரதன் ராஜேஷ்ஜெயின் டாக்டர் எஸ்.செந்தில்குமார் வழக்கறிஞர் பி.புகழ்காந்தி வழக்கறிஞர் மனுராஜ் சண்முகசுந்தரம் கன்னிகை ஜி.ஸ்டாலின் திருமதி. உமா ராணி/C சேகர்.ஜே.மனோகரன் விஜயன்ராமகிருஷ்ணன் முத்துவேல்ராமசாமி குமரி எ.பாபு, மாவட்ட வழக நிர்வாகிகள்: தேவஜவகர் ஜி.எம்.தேவன் இசட்.ஆசாத் எம்.சி, மண்டல குழு தலைவர்கள் மற்றும் நிலைக்குழு தலைவர் ஸ்ரீராமுலுகூ.பீ. ஜெயின் எம்.சி, சரிதாமகேஷ்குமார் MC டாக்டர் சாந்தகுமாரி MC ஐ.சி.எப்.வ.முரளிதரன் எ.நாகராசன் டி.எஸ்.பி.இராஜகோபால் எம்.டி.ஆர்.நாகராஜ் வே.வாசு செ.தமிழ்வேந்தன் எம்.சாமிகண்ணு எஸ்.இராஜசேகர் எஸ்.முரளி பொதுக்குழு உறுப்பினர்கள். எஸ்.பன்னீர்செல்வம் டி.வி.செம்மொழி லயன்பி.உதயகுமார் பி.ஜெ.துளசிலிங்கம் வி.ரமேஷ்(எ]நீலகண்டன் சாவித்திரிவீரராகவன் எம்.இப்ராஹிம்கனி டாக்டர் ஏ.பி.பூர்ணிமா இரா.கலைச்செல்வி சென்னை மண்டல அயலக அணி மாவட்ட அமைப்பாளர்கள்: ஏ.டி.மணி சி.கோவிந்தராஜ் டி.எஸ்.ராஜா பி.கே.ராஜேஷ்கண்ணா நா.முகேஷ்கண்ணா வானவில்விஜய் சுதாதீனதயாளன் MC ஜி.வி.நாகவள்ளி MC நா.துலுக்காணம் எல்.பி.எப்.மோகன் இரா.வீரமணி துரை கண்ணன் பி.விஜயகுமார் எம்.பெரோஸ்கான் எம்.விநாயகம் எல்.சம்பத்குமார் கா.ராஜ்முகமது கு.கிருஷ்ணமூர்த்தி து.ஆயிரம் க.பா.பிரதீப்குமார் ம.அசோக்குமார் பி.டில்லி எ.பிரபுதாஸ் எம்.ரமேஷ் அந்தோணிராஜேஷ் கோ.ஹரிஷ் அ.ரசாக் எஸ்.சண்முகம் எம்.விக்னேஷ் அ.சரவணன் வி.சுஜித்ரா அ.ஷக்பிக்அஹமத் வி.கே.பஷீப்அக்ரம் ஜெ.முஹம்மதுஅஷபர் வி.கோபிநாத் ஏ.கௌதம் எம்.மேகநாதன் மற்றும் கழக நிர்வாகிகள், கழக மூத்த முன்னோடிகள் முன்னோடிகள் கலந்து கொண்டு சிறப்பிக்கின்றனர்.

வட்ட கழக செயலாளர் ரகிபுல்லா (எ) சகுர் நன்றி கூறுகிறார்.

தமிழ்நாடு முதல்வர் ஆவடியில் முதல்வர் படிப்பகம்

மக்கள் பயன்பாட்டிற்காக காணொலி காட்சி வாயிலாக திறந்து வைத்தார்!

அமைச்சர் சா.மு.நாசர் பார்வையிட்டார்!

திருவள்ளூர், மார்ச் 5-

திருவள்ளூர் மாவட்டம் ஆவடி சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட, ஆவடி மாநகராட்சி 27வது வார்டு தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவுறுத்தலின் படி சுமார் ரூபாய் 3 கோடியே 69 லட்சம் மதிப்பீட்டில் நிதி ஒதுக்கி முதல்வர் பதிப்பகம் தரை தளம், முதல் தளம் மற்றும் இரண்டாம் தளம் கட்டப்பட்ட கட்டிடத்தை

மையத்தை காணொளி காட்சி வாயிலாக முதல்வர் மு.க.ஸ்டாலின் நேற்று திறந்து வைத்தார்.

இதனைத் தொடர்ந்து தமிழ்நாடு சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளி நாட்டு வாழ் தமிழர் நலத்துறை ஆவடி சா.மு.நாசர் பார்வையிட்டு அங்குள்ள பொது மக்களுக்கு மற்றும் மாணவர்களுக்கு இனிப்பு வழங்கினார்

இந்த நூலகம் மாணவர்கள் மற்றும் பொது மக்களிடையே நல்ல வரவேற்பை பெற்றுள்ளது.

மாணவர்கள் தங்கள் அறிவு திறனை மேம்படுத்திக் கொள்ளவும், போட்டித் தேர்வுக்கு படிக்கும் ஏழை எளிய மாணவர்களுக்கு மிகவும் பயனுள்ளதாக அமையும் என மகிழ்ச்சியை வெளிப்படுத்தினர்.

இந்த நூலகத்தின் சிறப்பு அம்சங்கள் : தரை தளத்தில் லைப்ரரி, கான்ஃபரன்ஸ் அரை, முதல் தளத்தில் செமினார் ஹால் மற்றும் கிரவுண்ட் சீட்டிங் ஏரியா. இரண்டாம் தளத்தில் பேன்ட்ரி ஏரியா மற்றும் ரீடிங் ஏரியா. இதன் அம்சங்கள்: குளிர்சாதன வசதி, வைபை கனெக்ஷன் சுத்திகரிக்கப்பட்ட குடிநீர், கழிவறை, சிசிடிவி கண்காணிப்பு உள்ளிட்ட வசதிகள் அமைந்துள்ளன.

முன்னதாக தமிழ்நாடு முதலமைச்சர், மு.க.ஸ்டாலின் அவர்களின் 73வது பிறந்த நாள் தமிழகம் முழுவதும் கடந்த சில தினங்களாக கொண்டாடி வரும் நிலையில் ஆவடி கிழக்கு பகுதியில் ஆவடி மாநகர செயலாளர் அவர்களின் ஏற்பாட்டில் 1000 பேருக்கு சிறப்பு அழைப்பாளராக சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் பொதுமக்களுக்கு புடவைகள் வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் ஆவடி மாநகராட்சி ஆணையர் ரா.சரண்யா, ஆவடி மாநகராட்சி மேயர் கு.உதயகுமார், மாநகர பொறுப்பாளர் சண்பிரகாஷ், மண்டலக் குழு தலைவர் அமுதாபேபி சேகர், நாராயணபிரசாத் ஜோதிலட்சுமி, அம்முபொன் விஜயன், பகுதி செயலாளர் பேபிசேகர், நாராயணபிரசாத், மாமன்ற உறுப்பினர்கள் பகுதி கழக செயலாளர்கள், வட்டக் கழக நிர்வாகிகள் அரசு அதிகாரிகள், மாமன்ற உறுப்பினர்கள், கட்சித் தொண்டர்கள் பொதுமக்கள் என ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

திருவள்ளூர் மேற்கு மாவட்ட தி.மு.க. சார்பில் அவசர ஆலோசனைக் கூட்டம் திருவள்ளூரில் நடைபெற்றது. இதில் மாவட்ட கழகச் செயலாளர் திருத்தணி எஸ்.சந்திரன் எம்.எல்.ஏ கலந்து கொண்டு மார்ச் 9ஆம் தேதி அன்று திருச்சியில் நடைபெறும் கழக மாநில மாநாட்டில் பங்கேற்பது குறித்து பல்வேறு ஆலோசனைகளை வழங்கினார். உடன் மாநில மாவட்ட கழக நிர்வாகிகள் ஒன்றிய நகர பேரூர் கழகச் செயலாளர்கள் அணிகளின் அமைப்பாளர்கள் நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.



மதுரை மாவட்டம் திருமங்கலம் மேலக்கோட்டை அருகே வருகிற 7ஆம் தேதி கழகத் தலைவர் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் முன்னிலையில் முன்னாள் முதல்வர் ஓ.பன்னீர்செல்வம் தலைமையில் பல்லாயிரக்கணக்கானோர் கழகத்தில் இணையும் விழா வெகு சிறப்பாக நடைபெற உள்ளதையொட்டி அதற்கான கால்கோள் ஊண்றும் விழா மதுரை வடக்கு மாவட்ட செயலாளர் வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி தலைமையில், மதுரை தெற்கு மாவட்ட செயலாளர் சேடபட்டி மு.மணிமாறன் முன்னிலையில் நடைபெற்றது, உடன் முன்னாள் முதல்வர் ஓ.பன்னீர்செல்வம், தேனி மாவட்ட செயலாளர்கள் தங்க தமிழ்ச்செல்வன் எம்.பி., கம்பம் ராமகிருஷ்ணன், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஓ.பி.எஸ்.ரவீந்திரநாத், கோபாலகிருஷ்ணன், சட்டமன்ற உறுப்பினர்கள் உசிலம்பட்டி ஐயப்பன், ஆண்டிபட்டி மகாராசன், கழக நிர்வாகிகள் ஏர்போர்ட் பாண்டியன், முத்துராமன், முத்துராமலிங்கம், இளமகிழன், ஆர்.எஸ். டி.பாண்டியன் மற்றும் கழக நிர்வாகிகள், கழகத்தினர் பெரும் திரளாக பங்கேற்றனர்